## 1. தேர்ச்சி: இறை பற்றுடன் நல்வாழ்வு வாழ்வர்

# 01 படைப்பு நமது பொறுப்பில்

**வாசிப்போம்**
*தொடக்கநூல் 1: 01-28, 2:15*
*யோபு 12:7-10, 33:4*

*இறைவனின் ஆவி என்னைப் படைத்தது; எல்லாம் வல்லவரின் மூச்சு என்னை வாழ்விக்கின்றது. யோபு 33: 4*

முதல் மனிதனான ஆதாம், மெல்லென வீசும் காற்றை அனுபவித்துக்கொண்டு, அசைந்தாடும் மரஞ் செடிகளையும், பறவைகள் விலங்குகளையும் பார்த்து ரசித்த வண்ணம் மர நிழலில் அமர்ந்திருக்கிறார்.

ஏவாள் : ஆதாம்! ஆதாம்! நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? என்ன, பலமான யோசனை போல இருக்கிறதே!



ஆதாம் : நான் நமது ஏதேன் தோட்ட வாழ்க்கையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். கடவுள் எத்தனை அற்புதமாய் மண்ணுலகையும் விண்ணுலகையும் படைத்தார்! அத்தோடு, ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள், நம்மை இங்கே கொண்டு வந்து குடியிருக்கச் செய்தாரென நினைக்கும் போது, நம்மீது கடவுள் வைத்த நம்பிக்கையும், தந்த பொறுப்பும் வியக்கக்கூடியதே!



இலவச விநியோகத்திற்காக

ஏவாள் : ஆமாம்! காற்று, நீர், நிலம், மரம், செடி, புல், பூண்டு என எத்தனை அழகான படைப்புகள்!

ஆதாம் : அது மாத்திரமா! பல்லின உயிரினங்கள், பறவைகள், மிருகங்கள் எல்லாம் கடவுளின் அற்புதமான படைப்புகளே. இவற்றையெல்லாம் படைத்த பின், கடவுள் அவை நல்லது என்று கண்டார்.

ஏவாள் : ஆதாம் கடவுள் படைத்த உலகத்தை, மனிதரான நம்மிடம் ஒப்படைக்கும் போது கூறியது நினைவில் இருக்கிறதா? என் நினைவில் மிகத் தெளிவாக இருக்கிறது. "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்: அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்." என்று கூறி நமக்குப் பெரும் பொறுப்பை வழங்கினார்.




ஆதாம் : ஏவாளே! கடவுள் நமக்கு ஆசீர்வாதத்துடன் படைப்பைப் பாதுகாக்கும் மிகப்பெரிய பொறுப்பையும் ஒப்படைத்துள்ளார். கடவுளின் உன்னத படைப்புகளை அனுபவிப்பதுடன், அவற்றின் அழகை, தூய்மையைத் தொடர்ந்து பேணும் பாரிய பொறுப்பு நமக்கு உண்டு. படைப்புகளைப் பொறுப்புடன் பராமரிக்கும் பணியில், கடவுளின் பணியாளரான நாம் ஈடுபட வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பாகும்.

ஏவாள்: நியாயமான எதிர்பார்ப்புத் தானே ஆதாம்! மண்ணான நம்மை, தம் சாயலில் உண்டாக்கி, நாசிகளில் தம் உயிர் மூச்சை ஊதி தம் படைப்புகளை பராமரிக்கும் பொறுப்பை நம்பித் தந்துள்ளார். நாமும் படைப்பு - பராமரிப்பில் பொறுப்புடன் ஈடுபடுவது கடவுளுக்கு நன்றி கூறும் ஒரு செயல்பாடாக அமையும்.

ஆதாம் : நன்றாகக் கூறினீர் ஏவாள்! மனிதரான நாம் கடவுளின் முக்கியமான படைப்பு மாத்திரமல்ல, படைப்புகளைப் பராமரிக்கும் பொறுப்புள்ள பணியாளராகவும் செயற்படவேண்டும். கடவுள் நம்பி ஒப்படைத்த

இவ்வுலகின் வளங்களை, பொறுப்புள்ளவர்களாக நமது வாழ்நாளில் பாவிப்பதுடன் அதைப் பேணிப் பாதுகாத்து, நமது எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவது நமது பொறுப்பாகும். அதுவே கடவுளின் எதிர்பார்ப்பாகும்.

ஏவாள் : ஆம்! படைப்புக்களை நாம் பொறுப்புடன் பராமரிக்கும் போது கடவுளின் அன்பின் ஈவு நமக்குத் தொடர்ச்சியாகக் கிட்டும். ஆனாலும், நாம் வயல் வெளிகளில் பயிரிடும்போது, மரம், செடி, புதர்களை அழிக்கிறோமே. உணவு, உடை, உறையுள் ஆகியவற்றுக்காக தாவர விலங்கு படைப்புகளைப் பயன்படுத்தும் போது, அவற்றின் இருப்புக்கும், மற்றும் வாழ்விடங்களுக்கு அழிவு ஏற்படத்தானே செய்கிறது!



ஆதாம் : படைப்புக்களைப் பாவிப்பது தவறல்ல ஏவாள்! ஆனால் அவற்றை சுயநல நோக்குடன், மிதமிஞ்சி அழித்தலும், அவற்றைப் பராமரிப்பு செய்யாதுவிடலும் கடவுளுக்கு விரோதமான செயல்களாகும். பயிரிடுவதற்கும், வீடு அமைப்பதற்கும் மரங்களை வெட்டும்போது மீள் மரநடுகையில் ஈடுபடாமல் இருப்பது தவறாகும். இவற்றைப் பொறுப்புடன் பாவிப்பதாலும், அவற்றின் இருப்பை உறுதி செய்வதாலும், படைப்புகளின் ஆக்கத்துக்கும் பராமரிப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கலாம்.

ஏவாள் : கடவுள் தன் படைப்புகளுக்கு அருமையான பராமரிப்பு வழங்குகிறார். தாவர வளர்ச்சிக்குத் தேவையான நீர், ஒளி, வளியை வழங்குகிறார். மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் தேவையான உணவு, உறையுள், தகுந்த பருவகாலங்கள் கொடுத்துப் பராமரிக்கிறார். கடவுளே நமக்கு முன்மாதிரியாக இருக்கும்போது, மனிதராகிய நாமும் அதிக பொறுப்புடன் நடக்க வேண்டுமல்லவா?

ஆதாம் : ஏவாள், ஆதியிலே அனைத்தையும் படைத்த கடவுள் இன்றும் தன் தொடர்படைப்புச் செயல்களில் ஈடுபடுகிறார். நாமும் படைப்புக்களை அழிப்பதைத் தவிர்த்து அவற்றின் ஆக்கத்திற்கும், பராமரிப்புக்கும் இருப்புக்கும் முக்கியத்துவம் கொடுப்போம். இதன் மூலம் நாமும் கடவுளின் தொடர்படைப்பு நடவடிக்கைகளில் இணைந்து, இறை விருப்பத்தை நிறைவேற்றலாம்.

ஏவாள் : படைப்பின் பராமரிப்புப் பணியாளராக உலக இருப்பு சார்பாக நாம் செயல்படுவோம். எதிர்கால சந்ததியினருக்காகப் படைப்பைப் பாதுகாத்து வழங்குவோம்.


> மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை
> நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.'
> திருப்பாடல் 24:1

கடவுள் நம்மை அழகற்ற, சலிப்படையக்கூடிய தீமை விளைவிக்கும் புவியில் வாழப் படைக்கவில்லை. கடவுள் நல்லது எனக் கண்டு படைத்த ஓர் அழகான, கவர்ச்சியான நன்மை பயக்கும் புவியில் நம்மை வைத்துள்ளார்.

> கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தது.
> தொடக்கநூல் 1:31

இப்புவியையும் அதிலுள்ள அனைத்தையும் நாம் வாழும், குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்துவதற்கு நமக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புவியில் வாழும் பேறுபெற்ற நாம், அதற்காக ஒரு கிரயம் கொடுத்தல்

அவசியம். அந்த கிரயமானது இப்புவியைப் பராமரிக்கும் பெரிய பொறுப்பாகும். நாம் புவியில் வாழப்போவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே. ஆனால் புவியோ பல தலைமுறைகளுக்கு இருக்கவேண்டியதாகும். ஆகவே இப்புவியை நேசித்து பராமரித்து, பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கையளிப்பது கிறிஸ்தவர்களின் தலையாய கடைமையாகும். படைப்புகளின் அழிவு மனித அழிவுக்கே வழிவகுக்கும். இறைதந்தை நமக்குத் தந்துள்ள இப்புவியை அன்புடன் பாதுகாப்போம் அப்பொழுது, படைப்புகளும் நம்மை அன்புடன் பாதுகாக்கும்.



## தீர்மானிப்போம்

- படைப்புக்களை பொறுப்புடன் பராமரிக்கும் பணியாளராகச் செயற்படுவோம்.
- தொடர்படைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, நமது பொறுப்பை வாழ்கைச் செயற்பாடுகள் மூலம் வெளிக்காட்டுவோம்.



## உங்களுக்குத் தெரியுமா?

- மனிதன் புவியைத் தவறாக முகாமைத்துவப்படுத்துவதாலும், நல்ல புவிக்காப்புப் பணியாளராகச் செயல்படாததாலும், பொறுப்பின்றி படைப்புகளைப் பயன்படுத்துவதாலும் அழிவுக்குக் காரணமான பல பிரச்சனைகளை புவி எதிர்நோக்குகிறது.

- மரங்களின் அழிப்பும், பச்சை வீட்டு விளைவும் தற்போது உலகளாவிய பிரச்சனையாக இருக்கிறது. பசுமை இல்ல வாயுக்களான காபனீரொட்சைட்டு, மீதேன் போன்ற வாயுக்கள் வளி மண்டலத்தில் தேங்குவதால், புவி வெப்பநிலை உயர்கிறது. துருவ பனிப்பாறைகள் உருகி, கடல் மட்டம் உயர்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. நிலப்பரப்பு நீருக்குள் அமிழ்கிறது. கடல் நீரின் வெப்பநிலை உயர்வால், வளியமுக்கம் நீரில் அதிகரித்து சூறாவளி புயல் ஏற்படுவதோடு வெப்ப அதிகரிப்பால் கடல் வாழ் அங்கிகளும் அழிந்து போகும் நிலை ஏற்படுகிறது.



இலவச விநியோகத்திற்காக

- காடழிப்பால் வளியில் அதிகரிக்கும் காபனீரொட்சைட்டு வாயுவை உறிஞ்சும் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. மண்ணரிப்பைத் தடை செய்யும் வேர்கள் அழிவதால் வளமான மண் அரிக்கப்படுகிறது, நிலத்தின் நீர் வற்றுகிறது. மண் வளமற்று, பயிர்கள் வளரமுடியாத பாலை நிலமாவதால் பஞ்சம், பட்டினி ஏற்படுகின்றது.

- தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சு வாயுக்கள், வளியில் கலப்பதால், அமில மழை பொழிந்து, நிலப்பரப்பை மாசடையச் செய்கிறது. நீர் நிலைகளை அடையும் தொழிற்சாலைக் கழிவுகள் அவற்றை மாசடையச்செய்து, உயிரினங்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.



## நினைவில் வைத்திருப்போம்

1. அனைத்தையும் படைத்தவர் கடவுள்.
2. படைப்புகளை பொறுப்புடன் பாதுகாத்து பராமரிப்பது மனுக்குலத்தின் கடமையும், இறைபணியும் கடவுளின் எதிர்பார்ப்பும் ஆகும்.
3. படைப்புகளைச் சுயநலமாக அழித்தலும், அவற்றைப் பராமரியாதிருத்தலும் கடவுளுக்கு எதிரான செயலாகும்.
4. படைப்புகளை நாம் பொறுப்புடன் பாவித்து, படைப்புகளின் இருப்பை உறுதி செய்வதன் மூலம் படைப்பு - பராமரிப்பு பணியாளாராகின்றோம்.
5. கடவுளின் தொடர்படைப்பு நடவடிக்கைகள் இன்றும் நடைபெறுகிறது. இதில் மனுக்குலமும் இணைந்து செயற்படல் வேண்டும்.

## செயற்பாடு

**இடைவெளிகளை நிரப்புக.**

1. நாம் இறைபடைப்புகளை பராமரிக்கும் ................................

2. ................................ ஒன்றை வெட்டும்போது இன்னொன்று நடுவது பொறுப்பான செயலாகும்.

3. நாம் படைப்புகளை ................................பாவித்து பராமரிக்க வேண்டும்.

4. பொறுப்புடன் படைப்புகளை பாவிப்பதால் அவற்றின் ................................ உறுதிப்படும்.

5. படைப்பின் அழிப்பை விட, அவற்றின் ஆக்கத்திற்கு ............................ முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

6. பொறுப்புடன் செய்யும் படைப்பு பராமரிப்பு ஓர் ......................... ஆகும்.

7. கடவுளின் ................................ நடவடிக்கை இன்றும் நிகழுகிறது.

2. I உமது பாடசாலையில் படைப்புகளை அழிக்கும் பொறுப்பற்ற நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்துக.


   II இந்நடவடிக்கைகளைத் தவிர்த்து, பொறுப்புடன் பராமரிக்க வழிமுறைகளை குழுவாக கலந்துரையாடி முன்வைக்க.

3. "படைப்பு நமக்குச் சொந்தம், படைப்பு நமக்குச் சொந்தமல்ல "- குழுக்களாக விவாதம் ஒன்றை நடத்துக.

4. i. திருவிவிலியத்தில் யோபு 12:7-10 வசனங்களை வாசித்து உரிய கட்டங்களை பூர்த்தியாக்குங்கள்.



இலவச விநியோகத்திற்காக




5. I. கடவுளின் தொடர்படைப்பு நடவடிக்கைகள் இன்றும் நிகழ்கின்றன. இவற்றில் 5 எழுதுக.

II. மேல் குறிப்பிட்ட தொடர்படைப்பில் நீர் எவ்வாறு இணைந்து செயல்படுவீர்?